

# පුරවැසි සභාව



## අදහස් රැසක් එක සම්මුතියක්

පුරවැසියා යනු මම ය, ඔබ ය, අප ය. ඔබ ගැමියකු විය හැකි ය. නාගරිකයකු විය හැකි ය. එහෙත් ඔබ ද මා ද පුරවැසියන් හැටියට සැලකේ.

ඔබට ද මට ද හුදෙකලාව ජීවත් විය නොහැක. එහෙයින් සමාජීය පුරවැසියන් හැටියට, ගම්මුන් හැටියට, නාගරිකයන් හැටියට ඔබට ලැබිය යුතු දේත්, ඔබෙන් සමාජයට ලැබිය යුතු දේත්, ඔබ අලුතින් නිර්මාණය කළ යුතු දේත් පිළිබඳ සිතීම වැදගත් ය.

**ඔබ ජීවත් වන ගමේ, ඔබට නීත්‍යානුකූල ව හා සාම්ප්‍රදායික ව ලැබිය යුතු දේ ඔබට ලැබේ ද?**

**ඔබ ජීවත් වන ගමට ඔබෙන් ඉටු විය යුතු දේ ඉටු වේ ද?**

**ඔබට ලැබිය යුතු දේට බාධා උපදවන දේ පවතී ද?**

**මහජන බදු මුදලින් නඩත්තු කෙරෙන වගකිව යුතු ආයතනවලින් ඔබට ලැබීමට නියමිත සේවා පවතී. ඒවා නිසි පරිදි නො ලැබෙන විටක ඒ පිළිබඳ අවදියෙන් කටයුතු කළ යුතු නොවේ ද?**

ඉදිරිපත් වීමෙන්, දැනුවත් වීමෙන්, සහභාගිත්වයෙන්, ඉල්ලීම් කිරීමෙන් එම සේවා ලබා ගැනීමේ අයිතිය ඔබ සතුව පවතී.

ඔබ උපන් පරිසරයෙහි ගහ කොළ, සතා සීපාවා සහ මිනිසාගේ යහ පැවැත්ම, ඔබගේ ද, මහ පොළොවෙහි ද පැවැත්ම සනාථ කරයි. එහෙයින් එම පරිසරය රැක ගැනීම ඔබගේ පැවැත්මෙහි ද තීරණාත්මක සාධකය වෙයි.

ඔබට ඔබගේ සේවාවන් ලබා ගැනීම සඳහා ඇති ආයතන මොනවා ද? එම සේවාවන් ලබා ගත හැකි ආකාරය කුමක් ද? එම සේවා කාර්යක්ෂම ව නො ලැබෙන හෝ මුළුමනින් ම නො ලැබෙනහෝ අවස්ථාවල ඔබ කළ යුත්තේ කුමක් ද?

### අපි කතා කරමු.

- ජාති, ආගම් හා පන්ති භේදවලින් තොර ව මිනිසකු හැටියට ගෞරවයෙන් ජීවත්වීමේ අයිතිය ඔබට ලැබේද?





- ඔබ ජීවත් වන ගමේ සංස්කෘතික හා කලා උරුමයන් ආරක්ෂා කෙරෙන අලුත් වැඩ පිළිවෙළකට ඔබ කැමති ද?

### අපි කතා කරමු.

ඔබ ජීවත් වන ගමට ආවේණික වූ කලා සහ සංස්කෘතිකාංග ඇත.

එම කටයුතුවල නියැලෙන ශිල්පීන් හට ආත්ම ගරුත්වයක් ඇති ව ජීවත් වීමේ අයිතිය තහවුරු කර තිබේ ද?

### අපි කතා කරමු.

ඔබ ජීවත් වන ගමෙහි දරුවන්ට, කාන්තාවන්ට ඇති වී තිබෙන පීඩාකාරී තත්ත්වයන් කවරේ ද? ඔවුන්ට ලැබිය යුතු සේවා කවරේ ද?

### අපි කතා කරමු.

ඔබ ජීවත් වන ගමෙහි විවිධ සමිති සංවිධාන පවතී. ඔබ ඇතැම් විට එම සමිතියක හෝ සමිති කිහිපයක හෝ සාමාජිකයකු විය හැකි ය.

මේ විවිධ සමිතිවලින් ඔබට විවිධ ප්‍රයෝජන ලැබේ.

මේ සමිතිවල විවිධ පක්ෂ හා විවිධ සමාජ කණ්ඩායම්වලට අයත් පුරවැසියෝ සිටිති.



මේ සැමට, එකට අසුන් ගත හැකි එක ම තැනක්. මේ සැමට එකඟත්වයෙන් වැඩ කළ හැකි විවෘත තැනක්.

මේ සැමට සෑම අතකින් ම ලැබිය යුතු සේවාවන් ලබා ගැනීම තහවුරු කර ගත හැකි මධ්‍යස්ථානයක්.

මේ සැමට, තම ගමෙහි සේවය කරන විවිධ රාජ්‍ය නිලධාරීන්, සමාජ ක්‍රියාකාරකයන්, ගැමි බුද්ධිමතුන්, නව නිර්මාණකරුවන් සමඟ කතා බහෙන්, අවබෝධයෙන් ගමට ඔබින නව සංවර්ධන සැලැස්මක් නිර්මාණය කර ගැනීමේ මහඟුම තැනක්. ඒ මහඟුම තැන පුරවැසි සභාව යි.

## අපි ඒ ගැන කතා කරමු. වාද කරමු.

සැලසුම් කරමු. කා හටත් එකඟ විය හැකි පුරවැසි සභාවක් නිර්මාණය කරමු. පුරවැසි සභාවේ විෂය ක්ෂේත්‍රයට අයත් සැලසුම් සහ ක්‍රියාකාරකම්වලට සක්‍රීය ව සම්බන්ධ වීම පුරවැසියාගේ වගකීම යි.

**විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය - 24/2, 28 වෙනි පටුමග, මල් පාර, කොළඹ 07,**
**දුරකථන 94-11-2565304/06 ෆැක්ස් 94-11-4714460 ඊ-මේල් cpa@cpalanka.org වෙබ් www.cpalanka.org**



# பிரஜைகள் சபை



## பல கருத்துக்கள் ஓர் இணக்கப்பாடு

பிரஜை என்பது நான், நீங்கள், நாம் ஆவோம். நீங்கள் ஒரு கிராமவாசியாக இருக்கலாம். நகரவாசியாக இருக்கலாம். ஆனால், நீங்களும் நானும் பிரஜைகள் என கருதப்படுகின்றோம்.

நீங்களும் நானும் தனித்து வாழ முடியாது. ஆனால், சமூகப் பிரஜைகள் என்ற வகையில்,கிராமவாசிகள் என்ற வகையில், நகரவாசிகள் என்ற வகையில், நீங்கள் பெறவேண்டியதையும், உங்களிடமிருந்து சமூகம் பெறவேண்டியதையும், நீங்கள் புதிதாகச் சிருஷ்டிக்க வேண்டியவற்றையும், பற்றி சிந்திப்பது மிக முக்கியமாகும்.

**நீங்கள் வசிக்கும் கிராமத்தில், உங்களுக்குச் சட்டபூர்வமாகவும் சம்பிரதாய பூர்வமாகவும் கிடைக்க வேண்டியவை உங்களுக்குக் கிடைக்கின்றனவா?**

**நீங்கள் வசிக்கும் கிராமத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகள் நிறைவேறுகின்றனவா ?**

**நீங்கள் பெறவேண்டியவற்றிற்கு தடை ஏற்படும் விடயங்கள் உண்டா?**

**பொதுமக்களின் வரிப்பணத்தில் பராமரிக்கப்படும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களிலிருந்து உங்களுக்குக் கிடைக்க வேண்டிய சேவைகள் பல இருக்கின்றன. அவை சரியான முறையில் கிடைக்காத போது அது பற்றி விழிப்பாகச் செயற்பட வேண்டாமா ?**

இதற்கு நாம் முன்வர வேண்டும், விழிப்புணர்வு பெற வேண்டும். பங்குபற்றுவதன் மூலமும் கோரிக்கைகளை முன் வைப்பதன் மூலமும் இச் சேவைகளைப் பெறும் உரிமை உங்களுக்கு உண்டு.

நீங்கள் பிறந்த சுற்றாடலின் மரஞ்செடி கொடிகள் - சீவராசிகள் என்பன மனிதனின் நல்வாழ்வையும், உங்களது நல்வாழ்வையும், இப்பூமியின் நல்வாழ்வையும் உறுதிப்படுத்துகின்றன. எனவே, இச்சுற்றாடலைப் பாதுகாப்பது உங்களுடைய உயிர்வாழ்வின் தீர்மானகரமான காரணியாகும்.

உங்கள் சேவைகளைப் பெறுவதற்கான நிறுவனங்கள் யாவை? அச்சேவைகளை எவ்வாறு பெற முடியும்? இச்சேவைகள் வினைத்திறனுடன் கிடைக்காத போது அல்லது முழுமையாகக் கிடைக்காத சந்தர்ப்பங்களில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

### நாம் கலந்துரையாடுவோம்

- இன - மத - வர்க்க பேதங்கள் இன்றி ஒரு மனிதன் என்ற வகையில் மாண்புடன் வாழும் உரிமை உங்களுக்குக் கிடைக்கின்றதா?
- நீங்கள் வாழும் கிராமத்தின் கலாசாரத்தையும் கலைகளின் மரபுரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய புதிய வேலைத்திட்டத்தை நீங்கள் விரும்புகிறீர்களா?







### நாம் கலந்துரையாடுவோம்

நீங்கள் வாழும் கிராமத்திற்கே உரித்தான கலைகளும் கலாசாரங்களும் உண்டு.

இக் கலாச்சார கலை நடவடிக்கைகளில் ஈடுபடும் கலைஞர்கள் கண்ணியத்துடன் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?

### நாம் கலந்துரையாடுவோம்

நீங்கள் வாழும் கிராமத்தின் பிள்ளைகளுக்கு, பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் ஒடுக்கு முறைகள் யாவை? அவர்கள் பெறவேண்டிய சேவைகள் யாவை?

### நாம் கலந்துரையாடுவோம்

நீங்கள் வாழும் கிராமத்தில் பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. சிலவேளை, நீங்கள் அத்தகைய ஒரு சங்கத்தின் அல்லது பல சங்கங்களின் அங்கத்தவராக இருக்கலாம்.

**இப்பல்வேறு சங்கங்களின் மூலம் உங்களுக்கு பல்வேறு பயன்கள் உண்டு.**

**இச்சங்கங்களில் பல்வேறு கட்சிகளையும், பல்வேறு சமூகக் குழுமங்களையும், சார்ந்த பிரஜைகள் இருக்கின்றனர்.**

**இவர்கள் அனைவரும், ஒன்றாக அமர்ந்து உரையாடக்கூடிய, எல்லோரும் இணக்கப்பாட்டுடன் செயற்படக்கூடிய ஒரு பகிரங்கமான இடம் தேவை.**

**இவர்கள் அனைவரும் சகல வழிகளிலும் பெறக்கூடிய சேவைகளை உறுதிப்படுத்தக்கூடிய மத்திய நிலையம் தேவை.**

இவர்கள் அனைவருக்கும் தமது கிராமத்தில் சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கிராம அறிஞர்கள், புதிய சிருஷ்டிகர்த்தாக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி, புரிந்துணர்வோடு கிராமத்திற்கு ஏற்ற புதிய அபிவிருத்தித் திட்டங்களை சிருஷ்டிக்கக் கூடிய சிறப்பிடம் இப்பிரஜைகள் சபையாகும்.

### நாம் அது பற்றிக் கலந்துரையாடுவோம் விவாதிப்போம்

திட்டமிடுவோம். எல்லோரும் இணங்கக்கூடிய பிரஜைகள் சபையை நிர்மாணிப்போம். பிரஜைகள் சபையின் விடயப் பரப்பில் உள்ளடக்கப்படும் திட்டங்களிலும் செயற்பாடுகளிலும் நேரடியாகப் பங்குபற்றுவது பிரஜைகளின் பொறுப்பாகும்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் - 24/2, 28வது ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு–7
தொ.பே : 0112 370801/3 ஈமேல் : cpa@cpalanka.org www.cpalanka.org